பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி
சென்னை – 4

14-08-2025 THURSDAY 7.15 PM

<u>ஆகாஷ்வாணி</u>
<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாடு சுதந்திரமடைந்து 78 ஆண்டுகளில் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்றுள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
- தீவிரவாதத்தையும், ஊழலையும் முற்றிலுமாக அகற்றுவதில் நாம் உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளதாகவும் குடியரசுத் தலைவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.
- சுதந்திர தினத்தை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை தில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்ற உள்ளார்.
- ஜம்மு காஷ்மீரின் கிஸ்துவார் மாவட்டத்தில் இன்று மேக வெடிப்பால் ஏற்பட்ட பெருமழையால் 10-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.
- பாலி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Mukund Sasikumar, Sidharth Rawat ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

- இனி விரிவான செய்திகள்

<<<<<<>>>>>>

நாடு சுதந்திரம் அடைந்து 78 ஆண்டுகளில் அனைத்துத்துறைகளிலும் வளர்ச்சிப் பெற்றுள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுவதை முன்னிட்டு, சற்றுமுன் நாட்டுமக்களுக்கு உரையாற்றிய குடியரசுத் தலைவர், இந்தியா மிகுந்த நம்பிக்கையுடனும், எழுச்சியுடனும் சுயசார்பினை நோக்கி பயணித்து வருவதாக கூறினார்.

பொருளாதார துறையில் நாம் படைத்துள்ள சாதனைகளை பட்டியலிடட குடியரசுத் தலைவர், கடந்த நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஆறு புள்ளி ஐந்து சதவீதமாக உயர்ந்துள்ளதையும் குறிப்பிட்டார்.

உலகின் வேகமாக வளர்ந்துவரும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உயர்ந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது, பணவீக்கம் கட்டுக்குள் இருப்பதாகவும், ஏற்றுமதி அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நகரமயமாக்கலில் விரைவான வளர்ச்சி பெற்று வருவதாக கூறிய அவர், நகரங்களுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உயர்த்தித் தருவதற்கும் அரசு கடந்த பத்தாண்டுகளில் நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜல்ஜீவன் இயக்கத்தின்கீழ், கிராமப்புறங்களில் உள்ள வீடுகளுக்கு குழாய் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் அடிப்படை வசதி பெறுவதற்கு முழு உரிமை உள்ளதாகவும் கூறினார்.

மருத்துவ கட்டமைப்பும் வளர்ச்சி பெற்றுள்ளதாக குறிப்பிட்ட குடியரசுத் தலைவர், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் 55 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு மருத்துவக்காப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு வருமான உச்சவரம்பின்றி ஆயுஷ்மான் காப்பீட்டு பயன்கள் அளிக்கப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் மின்னணு கட்டமைப்பு வியக்கத்தகு வகையில் வளர்ச்சி பெற்றுள்ளதாக குறிப்பிட்ட குடியரசுத் தலைவர், அனைத்து கிராமங்களும் 4-ஜி அலைபேசி வசதியை பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

விடுபட்ட சில ஆயிரம் கிராமங்களும் விரைவில் இந்த வசதியை பெற்றுவிடும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மின்னணு பணப்பரிவர்த்தனை கட்டமைப்பு நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டிருப்பதால், அரசு திட்டங்களின் பயன்கள் குறிப்பிட்ட பயனாளிக்கு வெளிப்படைத் தன்மையுடன் காலதாமதமின்றி அளிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் முயற்சியில், மின்னணு பொருளாதார கட்டமைப்பு முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் நாட்டு மக்களின் அன்றாட வாழ்வில் பெரிய மாற்றங்களை கொண்டுவர இருப்பதாக தெரிவித்த குடியரசுத் தலைவர், நாட்டின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான அடிப்படை தகவல்களை இந்த தொழில்நுட்பம் நமக்குஅளிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அனைத்துதரப்பு மக்களும் எவ்வித சிரமமும் இன்றி பயன்படுத்தும் வகையில், தொழில்நுட்பங்கள் வடிவமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கில், அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக தெரிவித்த அவர், சிறந்த அரசு நிர்வாகத்தின்மூலம், வறுமையின் பிடியில் இருந்து ஏராளமான மக்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் காரணமாக, மக்களுக்கு இடையிலான வருமான இடைவெளி குறைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

பொருளாதார வளர்ச்சியில் நாட்டின் அனைத்து மாநிலங்களும் தங்களது சிறப்பான பங்களிப்பை அளித்து வருவதாக தெரிவித்த குடியரசுத் தலைவர், நாட்டின் வளர்ச்சிக்காக விவசாயிகள், தொழிலாளர்கள் என அனைத்துத்தரப்பினரும் அர்ப்பணிப்பு உணர்வோடு சிறப்பாக பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

தேசிய கல்விக்கொள்கை மாணவர்களின் திறமையை மேம்படுத்துவதில் சிறப்பாக செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

வேலைவாய்ப்புகள் பெருகி வருவதாக குறிப்பிட்ட அவர், சுயதொழில் தொடங்குவதற்கான சூழ்நிலையையும் அரசு ஏற்படுத்தித் தந்திருப்பதாக தெரிவித்தார்.

நாட்டில் விண்வெளித் திட்டங்கள் பற்றி குறிப்பிட்ட குடியரசுத் தலைவர், இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லாவின் விண்வெளி பயணம் குறித்தும் எடுத்துரைத்தார்.

வளரும் சமுதாயத்தினருக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் திரு சுபான்ஷு-வின் விண்வெளிப்பயணம் அமைந்ததாக குறிப்பிட்ட குடியரசுத் தலைவர், இந்தியாவின் ககன்யான் விண்வெளி பயணத் திட்டத்தில் இந்திய வீரர்கள் விண்வெளியில் பயணிக்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை பற்றி குறிப்பிட்ட குடியரசுத் தலைவர், நாடு பாதுகாப்புத்துறையில் சுயசார்பு நிலையை எட்டியிருப்பதை இது நிரூபித்திருப்பதாகவும் கூறினார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான இந்த துல்லிய தாக்குதல் நடத்தியது குறித்து நாடாளுமன்றக் குழுவினர் உலக நாடுகளுக்கு சென்று விளக்கிக் கூறியதையும் அவர் சுட்டிக்காட்டினார்

தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு உறுதியானது என்றும், அதற்கு எதிரான போராட்டம் தொடரும் என்றும் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வளர்ச்சிக்கு ஊழல் தடையாக உள்ளது என்று குறிப்பிட்ட திருமதி திரௌபதி முர்மு, அதனை முற்றிலுமாக அகற்ற உறுதியான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சுதந்திர தினத்தை முன்னிட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை வரலாற்று சிறப்பு மிக்க தில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றவுள்ளார்.

இவ்வாண்டின் சுதந்திர தின விழா கொண்டாட்டங்களின் கருப்பொருள் ''புதிய பாரதம்'' என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கொண்டாட்டத்தின்போது ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்கான கொண்டாட்டமும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட சிறப்பு அழைப்பாளர்கள் நாட்டின் 79-ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்டத்தில் இவ்வாண்டு பங்கேற்க உள்ளனர்.

<<<<<<>>>>>>

தேசியக்கொடியை பயன்படுத்துவதற்கான விதிமுறைகளை பொதுமக்கள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், உண்ணும் பொருட்களில் தேசியக்கொடி உருவத்தை பதிக்கக்கூடாது என்று அறிவுறுத்தியுள்ளது.

ஆடைகள், சீருடைகள் மற்றும் வேறு எந்த அணியும் பொருட்களிலும் தேசியக்கொடி உருவத்தை பதிக்கக்கூடாது என்றும் தெளிவுபடுத்தியுள்ளது.

இருக்கைகள், கைக்குட்டைகள் மற்றும் எந்தவொரு உடையிலும் நேரடியாக தேசியக்கொடியை அச்சடித்து பயன்படுத்தக் கூடாது என்றும் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் பாலியல் வன்முறை அதிகரித்துள்ளதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக தெரிவித்தார்.

மாநிலத்தில் தேசிய சராசரியைவிட இரண்டு மடங்கு அதிகமாக குற்றங்கள் நிகழ்வதாக குறிப்பிட்ட ஆளுநர், பொதுப்பாதைகளை பயன்படுத்தும் பட்டியலின மக்கள் தாக்கப்படுவதாகவும் கூறினார்.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரின் கிஸ்துவார் மாவட்டத்தில் இன்று மேக வெடிப்பால் ஏற்பட்ட பெருமழையால் 10-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

மேலும் 75 பேரை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

இந்த மழையால் அதிக அளவு பொருட்சேதம் ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும் எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கிஸ்துவாரில் இருந்து 90 கிலோமீட்டர் தொலைவில் உள்ள Chasoti என்ற இடத்தில் இந்த மேகவெடிப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உள்ளிட்டோர் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

தேசிய பேரிடர் மீட்புப்படையினர் விரைந்து சென்று மீட்புப்பணிகளில் ஈடுபட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ராமேஸ்வரத்தை சேர்ந்த எட்டு மீனவர்களை இலங்கை நீதிமன்றம் இன்று நிபந்தனையுடன் விடுவித்தது.

இந்த எட்டு பேரும் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனிடையே, ராமேஸ்வரத்தை சேர்ந்த மேலும் 16 மீனவர்களின் நீதிமன்ற காவல் இம்மாதம் 29-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இலங்கையிலிருந்து உரிய ஆவணங்கள் இன்றி படகில் வந்த இரண்டு இளைஞர்கள் கோடியக்கரை அருகே கடலோர காவல்குழும அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் நடத்திய விசாரணையில், இலங்கையின் காங்கேசன்துறை கடற்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த படகை திருடிக்கொண்டு தமிழகம் வந்தது தெரியவந்துள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Mukund Sasikumar, Sidharth Rawat* ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

பாலியில் நடைபெற்றுவரும் ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் *Mukund Sasikumar, 6-2, 6-0* என்ற செட் கணக்கில், ஜப்பானின் *Shunsuke Nakagawa* -வை வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில், *Sidharth Rawat 7-6, 6-2* என்ற செட் கணக்கில், நியூசிலாந்தின் *Alexander Klintcharov* -வை வென்றார்.

--------------

சிங்கப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Abhinav Sanjeev – Manish Suresh Kumar* இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

----

தாய்லாந்து சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Dhruv Negi, Bharat Raghav, Pranay Katta* ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

-------------------

முப்படையினருக்கான ஸ்குவாஷ் சாம்பியன் பட்டத்தை இந்திய கடற்படை வென்றுள்ளது.

*<<<<<<END>>>>>>*